**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **80/2024** |
| **பெயர்:** | **பாலாஜி** |
| **தந்தை பெயர் :** | **தமிழ்ச்செல்வன்** |
| **வயது:** | **38/2026** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **தொழில்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **30th day of June 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 3.47 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. வழக்கு காசோலை எண் என்னவென்றால், 00 01 03 ஆகும். காசோலையை நான் எப்போது கலெக்சனிற்கு தாக்கல்செய்தேன் என்றால், 03.10.2023 ஆகும். காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதியில் இருந்து 20 நாட்கள் கழித்துதான் நான் காசோலையை கலெக்சனிற்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். எதற்காக 20 நாட்கள் கழித்து தாக்கல் செய்தேன் என்றால், எதிரியானவர் தான் 10-15 நாட்கள் கழித்து கலெக்சனிற்கு போட சொன்னார். நான் எனது புகார் மனுவில் எதிரியானவர் காசோலை தேதியில் இருந்து 10-15 நாட்கள் கழித்து கலெக்சனிற்கு போட சொன்னார் என்ற விபரத்தினை

சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. எந்த தேதியில் காசோலை திருப்பப்பட்டது என்றால், 04.10.2023 ஆகும். என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்றால், போதிய பணம் இல்லை என்பதால் திருப்பப்பட்டது. என்னுடைய ரிட்டன் மெமோவில் Refer to Drawer என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறு என்றால், சரிதான்.

2. காசோலை திருப்பப்பட்ட பின் எதிரியை நேரில் சந்தித்து கேட்டேனா என்றால், இல்லை. நான் எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், 27.10.2023 ஆகும். எதிரிக்கு காசோலை திருப்பப்பட்ட 04.10.2023 தேதியில் இருந்து 23 நாட்கள் கழித்துதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால், சரிதான். 23 நாட்கள் கழித்துதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா என்றால், இல்லை.

3. வழக்கு காசோலையை நான்தான் பூர்த்தி செய்து வங்கியில் கலெக்சனிற்கு தாக்கல் செய்தேன் என்றால், எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி எங்கு வைத்து பூர்த்தி செய்தார் என்றால், தெரியாது. என்னிடம் காட்டப்படும் EX-P1 ல் உள்ள எழுதப்பட்ட எழுத்துக்கள் வெவ்வேறாக இருக்கிறதா என்றால், அதைப்பற்றி தெரியாது எதிரிதான் கொடுத்தார். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் நான் இட்டேனா என்றால், எதிரிதான் கையொப்பம் இட்டார்.

4. என்னிடம் காட்டப்படும் EX-P1 ல் உள்ள கையொப்பத்திற்கும், என்னிடம் காட்டப்படும் EX-P5 ல் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு இருக்கிறதா என்றால், இருக்கிறது. காசோலையில் உள்ள விபரங்களை நான் தான் பூர்த்தி செய்து கையொப்பம் இட்டேன் என்றால், சரியல்ல. காசோலை மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டையை forensic Laboratory -க்கு அனுப்புவதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உண்டா என்றால், இல்லை.

5. செலான்-ஐ நான்தான் பூர்த்தி செய்தேன் என்றால், சரிதான். அந்த செலானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை.

செலான் மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் கையெழுத்தும் ஒன்றாக இருப்பதால் தான் நான் செலானை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

6. பேராவூரணியை சேர்ந்த முத்து என்பவர் இருசக்கர வாகணம் விற்பனை செய்து வருகிறார் என்றும், அவருடன் நான் எதிரி மற்றும் சரவணன் ஆகியோர் இரு சக்கர வாகணங்கள் மற்றும் நான்கு சக்கர வாகணங்கள் விற்றுவருகிறோம் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் வழக்கு காசோலையை முத்துவிடம் கொடுத்திருந்தார் என்றும், முத்துவிற்கு தெரியாமல் காசோலையை எடுத்து நான் எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அந்த வாகண விற்பனை தொழில் செய்யும் எங்கள் நான்கு நபர்களிடமும் உள்ள காசோலை பூர்த்தி செய்யாமல் கையொப்பம் இடாமல் எங்களிடம் இருப்பது சகஜம் தான் என்று சொன்னால், சரியல்ல. எங்கள் நான்கு நபர்களுக்கும் இடையே சுமார் 4 வருடங்களுக்கு முன்பு பிரச்சணை ஏற்ப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அந்த பிரச்சணையின் காரணமாக சரவணன் என்பவர் என் மீது காசோலை மோசடி வழக்கும், நான் எதிரி மீது காசோலை மோசடி வழக்கும் போட்டுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. சரவணன் என்பவர் என் மீது காசோலை மோசடி வழக்கின் எண் தெரியுமா என்றால், தெரியாது.

7. நான் எதிரக்கு எந்த கடனும் கொடுக்கவில்லை என்றும், எதிரியானவர் என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும், அதற்கு அவர் காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.
8. எங்களுக்குள் தொழிலில் ஏற்பட்ட பிரச்சிணை காரணமாக எதிரியின் மீது நான் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

9. பேராவூரணியை சேர்ந்த முத்துவை விசாரிப்பதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபணை இருக்கிறதா என்றால், இல்லை. எதிரிக்கும் எனக்கும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றும், எதிரி மீது நான் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால்

இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 04.15 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.